| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| சா.சேதுராம வர்மா, | 1.அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், |
| அரசுத் தேர்வுகள் இயக்குநர், | மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |
| சென்னை - 600 006. | 2.அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் |
| | (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்),. |

**ந.க.எண்.** 023720/எச்.1/2023 **நாள்** : 06.05.2023

ஐயா/அம்மையீர்,

**பொருள்** : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – 2022-2023-ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் - மார்ச்/ஏப்ரல் 2023, தேர்வு முடிவுகள் - அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் (TML) - அனைத்துப் பள்ளிகளும் ஆன்-லைன் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்வது தொடர்பான அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை** : அரசாணை (நிலை) எண். 14, நாள். 29.01.2018.

-----

2022-2023 ஆம் கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயின்ற பள்ளி மாணவர்களின் பொதுத் தேர்வு முடிவுகள் வருகிற 08.05.2023 **(திங்கட்கிழமை) அன்று காலை 9.30 மணிக்கு** வெளியிடப்படவுள்ளது.

முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்கள், தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் 08.05.2023 **அன்று** www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, தங்கள் பள்ளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User-ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி, மேல்நிலை இரண்டாம் ஆண்டு வகுப்பு மாணவர்களுக்கான அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) **முற்பகல் 9.45 மணி முதல்** பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்துமாறும், அதற்குத் தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் தயார் நிலையில் வைத்திருக்க பள்ளித் தலைமையாசிரியர்களை அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஒம்/-**

**இயக்குநர்**

**<u>நகல்</u>**

1. பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை – 600 006
   – தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.